Literacy for a Billion

Movie: Irandu Mugam
Year: 2010

Song: Kannum Kannum
Lyricist: Vairamuthu

கண்ணும் கண்ணும்
உரசிக் கொண்டால்
நெஞ்சில் தீயடா
புயல் மையம் கொண்ட
கடலைப் போல
தேகம் ஆச்சுடா
மண்ணில் விழுந்த
மழைத்துளி போல
என்னுள் சேரடா
மழைநீரை தின்னும்
பறவை போல
என்னை தின்னடா
உயிர்வரை எரியும்
தீ பாரடா
உறைந்திடும் பெண்ணின்
நிலை கேளடா
காற்றுக்கு வழி இன்றி
கட்டிக் கொள்ளடா
சிறகுகளை விரிப்போமா
பறவைகளாய் பறப்போமா
கண்ணும் கண்ணும்
உரசிக் கொண்டால்
நெஞ்சில் தீயடி
புயல் மையம் கொண்ட
கடலைப் போல
தேகம் ஆச்சுடி

நனையப் பிடிக்குமெனில்
மழையாவேன்
நடக்கும் கால்களுக்கு
கொலுசாவேன்
தழுவும் நேரம் காற்றோ
உன்னை தொட்டு
வரும் பூங்காற்று
என்னை தொட்டவுடன்
நான் அறிவேன்
உன்னால் பெண்ணில் ஊற்றோ

கம்பன் மறந்த
கவிதையோவென்று
பெண்ணின் சுவைகளை தருமா
கண்ணதாசனின்
காதயானால்
கவிதைக்கு பஞ்சங்கள் வருமா
கோவில்மணி ஓசையை போல்
புனிதம் ஆனவளே
கோடிமுறை சொன்னாலும்
இனிக்கும் உன் பெயரே
சிறகுகளை விரிப்போமா
பறவைகளாய் பறப்போமா

ஓரப் பார்வைகளை
நான் சேர்ப்பேன்
ஒட்டி வைத்து
உந்தன் முகம் பார்ப்பேன்
பார்வை சுகங்கள் தருமா
என்னை கரைக்கிறது
உன் பேச்சு
உண்மை உரைக்கிறது
சொல்மூச்சு
கண்ணா மீதம் வருமா
உன்னுயிர் தேடி
என்னுயிர் சேரும்
காதன் இலக்கணம் இதுவோ
ஒருவரின் நெஞ்சினில்
இருவருமானோம்
நிலை இது காதன் வரமோ
கைகோர்த்து நடந்திடத்தான்
உலகம் போதாது
ஆ காதயாய் நாம் வாழ்வதற்கு

ஜென்மம் போதாது
சிறகுகளை விரிப்போமா

பறவைகளாய் பறப்போமா

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*